உ
சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-உ திங்கி ஆம்பாளத,

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னேந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ | யாழ்ப்பாணம்:—சுபானுவரு பங்குனி மீ உசஉ (1944 ஏப்ரல்மீ 6 வியாழக்கிழமை) [இல. உ.

ராஜாஜி இலங்கைக்கு வருகிறார்

இலங்கை - இந்திய காங்கிரஸ் மகாநாடு

சென்னையின் பழைய மேயரும் திரியும் இந்திய தேசியவாதியுமான திரு ஜி ராஜகோபாலாச்சாரியார் இம்மாதம் 28-க்கு தேதி கொழும்பு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர் இலங்கை இந்தியக் காங்கிரஸின் வருடாந்த மகாநாட்டுக்காக வருகிறார்.

திரு இராஜகோபாலாச்சாரியாருக்குக் கொழும்பு நகர மண்டபத்தில் வரவேற்புபசாரம் மளிக்கப்படுமெனத் தெரிகிறது.

இந்திய சட்டசபைப் பிரதிநிதியான திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியரும் அதேதினம் வருவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. அவரையும் இலங்கை இந்தியக் காங்கிரஸ் அழைத்திருக்கிறது.

காங்கிரஸ் மகாநாட்டில் பின், இந்திய அதிதிகள் தோட்டப் பகுதிகளைச் சுற்றிப் பார்வையிடுவரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அரசாங்கத்தின் தோல்விகள்

கோம்மன்ஸில் கேள்விகள்

லண்டன், ஏப். 1

டில்லி அசெம்பிளியில காங்கிரஸ் கட்சி, தேசியக்கட்சி, முஸ்லிம் லீக் கட்சி இவற்றின் அங்கத்தினர்கள் ஒன்றுசேர்ந்து அரசாங்கத்தை எதிர்த்து வாக்குப் போட்டதாகப் பத்திரிகைகள்மூலம் அறிந்ததாக மிஸ்டர் அமெரி கோம்மன்ஸில் கூறினார்.

மிஸ்டர். ஸோரன்ஸன்:—டில்லி அசெம்பிளியில் அரசாங்கத்தாருக்குப் பல தோல்விகள் ஏற்பட்டிருப்பதால் என்ன விசேஷம் உண்டென்பதை அமெரி கூறுவாரா?

மிஸ்டர். அமெரி — இவ்விஷயத்தில் எனது அபிப்பிராயங்களைக் கேள்வி பதில் மூலம் தெரிவிப்பதற்கில்லை.

ஓர் அங்கத்தவர்: — சமீபத்தில் கொம்மன்ஸில் அரசாங்கத்திற்குத் தோல்வி ஏற்பட்டதுபோன்றதா மத்திய அசெம்பிளியில் அரசாங்கத்தின் தோல்வி?

மிஸ்டர் ஸோரன்ஸன்:— அரசாங்கத்தைத் தோற்கடித்தவர்கள் காங்கிரஸ் அங்கத்தவர்களுமட்டுமல்லவா? இதர அங்கத்தவர்களும் எதிர்த்து வாக்குப் போட்டனரல்லவா?

மிஸ்டர் அமெரி, மேற்கொண்டு பதில் தரவில்லை.

வங்காள கஷ்ட நிவாரண நிதி

இலங்கை இராமகிருஷ்ண சங்கத்தினரும், கொழும்பு விவேகானந்த சபையினரும் வங்காளத்திற் சமீபத்தில் நிகழ்ந்த பஞ்சத்தினால் ஏற்பட்ட கஷ்டத்தை நீக்க ஆரம்பித்த நிதிக்கு இதுவரை ரூபா 36,122-58 சேர்ந்திருக்கின்றது. —கடி.

கொப்பராக்காரருக்குச் சகாயம்

நேரடியாக ஏற்றி அனுப்பும்படி ஆலோசனை

மட்டக்களப்பு ஏப் 5—

மட்டக்களப்புக் கெங்குப் பொருட் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டமொன்று நடைபெறுகையில், கொப்பராவை இந்தியாவுக்கு நேரடியாக ஏற்றுமதி செய்யத் தொழில வர்த்தக மந்திரியிடம் ஒரு விசேஷ ஸ்கீம் கோரும்படி மகாநாதிபதி எஸ் ஆம்ஸ்ட்ரோங் ஆலோசனை கூறினார். நேரடியாக ஏற்றுமதி செய்வதனால் புகையிரதக் கட்டணமும் கொழும்பில் தெங்குப் பொருட்களை ஒப்படைக்குஞ் செலவும் மீதப்படுமென்று அவர் எடுத்துரைத்தார்.

இப்பொழுது சங்கம் கொழும்பிலுள்ள சபையுடன் இணைக்கப்பட வேண்டுமென்றார், தொழில் விருத்தி செய்யக்கூடிய வரையில் மட்டும் கொப்பராவை அங்கு அனுப்ப வேண்டுமென்றும் சபை தீர்மானித்தது.

தேங்காயையும் இந்தியாவுக்கு ஏற்றியனுப்புவதற்கு அக்கே வியாபாரிகளை ஒழுங்கு செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்விஷயத்தை ஆலோசிப்பதற்கு ஓர் உபநிர்வாகசபை நியமிக்கப்பட்டது.

கம்பளி ஏற்றுமதி இந்தியாவில் தடை

இலங்கைத் தேயிலைத் தொழில் பாதிக்கப்படலாம்

காவலப்பிட்டி ஏப் 4—

இலங்கைக்குக் கம்பளிகள் ஏற்றுமதி செய்வதை இந்தியா தடை செய்திருப்பதால், தேயிலைத் தொழில பலமாகப் பாதிக்கப்படலாம். தேயிலைத் தோட்டங்களில வேலை செய்யும் இந்தியத் தொழிலாளிகளுக்குக் கம்பளிகள் அத்தியாவசியமானவைபாகும். அதுபனிமழைக் காலங்களில அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கிறது.

தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளுக்குக் கம்பளிகள் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று தோட்டத் துரைமார் கூறுகின்றனர். ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு கம்பளி கட்டாயமாக இருக்க வேண்டியது.

இலங்கைக்கு வர வேண்டிய ஒரு பெரிய கம்பளி 'பார்சல்' ஆகாயத் துறைமுகப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறதென்றும் அங்குள்ள கம்பளி தொழிற்சாலையும் கம்பெனி யாரிடமுள்ள மானேஜர் சொன்னார்.

கம்பளி இலங்கையில் தேயிலைத் தொழில ஆரம்பமான காலத்திலிருந்தே தொழிலாளிகளால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஏற்றுமதியை இந்தியத் தொழிலாளிகளின் வேலைத்திறன் குறையுமென்று ஆட்சேபிக்கிறது.

அமோகமான உணவு உற்பத்திக்குப் பாராட்டு

வடமத்திய மாகாணத்திற்கு சேர் குணத்திலகாவின் விஜயம்.

அனுராதபுரம் ஏப் 3.

பொதுசனப் பாதுகாப்புக் கமிஷனர் வடமத்திய மாகாணத்தை அதிகமாக விளைவிப்பதற்கும், அதன் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் ஆரோக்கியத்தையும் உயர்த்தக் கிட்டங்கள் போடுவதற்கும் பிரதான காரணங்களில ஒன்று அம்மாகாண மக்கள் அதிக உணவுப் பொருளை உற்பத்திசெய்து மற்ற மாகாண வாசிகளுக்கு ஏறக்குறைய 6,00,000 புஷல் நெல் "சப்ளை" செய்திருப்பதேயாகும்" என்று மாகாணத் தலைவர் மிஸ்டர் ஆர். அலுவிஹாரே நேற்றுத் திதப்பனையிற் கிராமவாசிகளின் கூட்டமொன்றிற் பேசுகையிற் கூறினார். தேசிய உணவுப்பொருள் உற்பத்தி இயக்கத்திற் செய்திருக்கும் மகத்தான சேவையைப் பாராட்டிப் பிரதம தலைமக்காரர்களுக்கும் விவசாயிகளுக்கும் மெடல்கள் வழங்க வந்த சேர். ஒலிவர் குணத்திலகாவை வரவேற்பதற்காக அங்கு கிராமவாசிகள் கூடியிருந்தனர்.

அரிவி விழா

அக்கூட்டத்திற்கு விஜயஞ்செய்திருந்த சேர். ஒலிவர் குணத்திலகாவிற்கு ஒரு சிறு ஞாபகப் பொருள் அளிக்கப்பட்டது. அதன் பின்பு சேர் குணதிலகா அரிவி விழாவை ஆரம்பித்து வைக்க ஊர்வலமாக ஆழமுதச்சேல்லப்பட்டார். குளக்கரைச் சாகுபடிப் பிரதேசத்தில் அரிவி விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதக உணவுப்பொருள் உற்பத்தி இயக்கத்தின பயனாக இந்தச் சாகுபடி விருத்தியடைந்திருப்பதுடன் சென்ற பெரும்போகச் சாகுபடியில 3000 ஏக்கர்களுக்கு அதிகமான புதிய நிலம் இம்மாதிரிச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய 8000 ஏக்கர் நிலத்தில் நெல் அறுக்கப்படுவதைக் கமிஷனர் பார்வையிட்டுவிட்டு காஹடகள்ஹிலியாவிற்கு விஜயஞ் செய்தார். ஒரு வயது முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் விநியோகஞ் செய்யப்படுவதை சேர் குணதிலகா கண்டார். பால சாப்பிடுவதில் குழந்தைகள் காண்பித்த ஆவலை இலவச பால விநியோகத்தை விலக்கித்து ஆர்வ அளிக்கவேண்டியதன் அவசியத்தைக் காண்பிக்கப் போதுமானது. இப்புதிய பால விநியோகத் திட்டம் நாளடைவில் தனவந்தர்களுக்கு முன்பு ஆதரவளிக்கக் குறைந்தது. ஆனால் பல மாணவர்கள் முன்வந்து இதற்குத் தன்னார்வமாக 10 க்கு மேற்பட்ட இலவச பால விநியோக ஸ்தலங்களை ஆரம்பித்திருக்கின்றனர்.

ஹுருலு அரசாங்கச் சேனைப் பயிரையும் சேர். குணத்திலகா பார்வையிட்டார். மழை காரணமாகச் தெரு, போக்குவரத்திற்கு இடையூறாக விருந்ததால் விருந்தினர்

இத்தாலிய மன்னர் விலக யோசனை

தாம் கிருப்தியடைவதாக ஸ்போர்ஸா கூறுகிறார்

நேப்பிள்ஸ், ஏப். 2

ராய்ட்டரின் விசேஷநிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:—

ஒரு லெப்டினெண்ட் கவர்னரிடம் தமது அதிகாரங்களை ஒப்படைத்துவிட்டு விக்டர் எம்மானுவேல மன்னர் ஓய்வுபெற்றுக்கொள்வாராயின் ,தாம் பூரணதிருப்தியடைவதாகக் கௌண்ட்ஸ்போர்ஸா இன்று தெரிவித்தார்.

பிபிலித் தேர்தலின் எதிரொலி

தோல்வியடைந்த அபேட்சகரின் மனு

அரசாங்க சபையின் பிபிலிஸ்தானத்துக்குச் சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில மிஸ்டர். எஸ். ஏ. பீரிஸ் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டாரல்லவா? அவருடைய தேர்தலை ஆட்சேபித்துத் தேர்தலில் தோல்வியடைந்தவருள் ஒருவரான காலியைச்சேர்ந்த மிஸ்டர். டப்ளியூ. தஹாயகா நேற்றுச் சுப்பிறீம் கோட்டில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார்.

தேர்தலின்போது மிஸ்டர். பீரிஸ் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ அரசாங்கத்தோடு பகிரங்கமாகவோ சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் செய்திருந்ததாகவும அரசாங்க சபைச் சட்டவிதிகளுக்கு இது முரண்பட்டதென்றும், மிஸ்டர். தஹாயகா தமது மனுவிற் குறிப்பிட்டிருந்தார்.

தேர்தலை நீக்க வேண்டுமென்று மிஸ்டர். தஹாயகா தமது மனுவிற் கோரியிருக்கிறார்.

வலிகாமம் கிழக்குத் தமிழாசிரியர் சங்கம்

ஷை சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று 1-4-44 சனிக்கிழமை மு. ப. 10-30 மணியளவில் சங்கத் தலைவர் திரு. ம. வைத்தியலிங்கம் அவர்கள் தலைமையிற் கூடியது.

அதகருணம் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கல்லூரித் தலைமையாசிரியர் திரு. ஆ. சோமசுந்தரம் அவர்களால "விடைப் பத்திரங்களின் புள்ளிகளை யளத்தல்" என்னும் விஷயமும, இலங்கை அரசாங்கசபை அங்கத்தவர் திரு. சு. நடேசபிள்ளை யவர்களால "புதிய கலைத் திட்டம்" என்னும் விஷயமும உபந்நியாசிக்கப்பட்டன. பி. ப. 1-30 மணியளவில் கூட்டம் கலைந்தது. —கடி.

ராணுவ மோட்டார்களிற் பிரயாணஞ் செய்தனர். ஹுருலு ஏரி சமீபத்தில சீர்திருத்தப்பட விருக்கிறது. அதன தண்ணீரைக் கொண்டு 5000 ஏக்கர்களுக்கு அதிகமான புதிய பிரதேசம் சாகுபடி செய்யலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுவரு
பங்குனிமீ உசஉ வியாழக்கிழமை

புகைரத அதிகாரிகளும் பிரயாணிகளும்

தமிழர்கட்குரிய வருடப்பிறப்புக் கொண்டாட்டம் சமீபித்துள்ள காலம், அரசினர்க்குரிய ஈஸ்டர் விடுமுறைக் காலம், இலங்கையிலுள்ள வித்தியாசாலைகள் பாடசாலைகளெல்லாம் விடுமுறைநாட்கள் உதவப்பட்ட காலம், விடுமுறை காலத்திற் பற்பல கருமமாக மக்கள் பல இடங்களுக்கும் போக்கு வரவு செய்யுங் காலம் இந்த வாரமும் அடுத்த வாரமுமாகும். முந்தி இந்த விடுமுறை காலத்திலேயே புகைரதப் பகுதியார் குறிக்கப்பட்ட ஒவ்வொரு தொகைப் பணத்தோடு பிரயாணிகள் இலங்கை முழுவதும் இரண்டுவார காலத்திற்குத் தாம்தாம் விரும்பிய ஸ்தானங்கட்குப் பிரயாணம செய்யத்தக்கதாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் யுத்தங் காரணமாக அந்த வசதிகள நீங்கிவிட்டன. அவற்றையிட்டுக் கவலைப்படுதலும் பிழையாகும்.

இப்பொழுது இப்படியான சமயத்திலே, "நடு உழவில நந்தையறுந்தவிதமாக" புகைரதப் பகுதியார் பிரயாணிகட்குப் பிரவேசச் சீட்டுகளையுதவும் விஷயத்திற் பெருங் கட்டுப்பாடு செய்யத் தலைப்பட்டுக்கொண்டனர். ஒன்றுகொன்று தூரித்த தானங்களுக்கு மாத்திரமல்லாமல், சமீபத்துள்ள புகைரத ஸ்தானங்களுக்கிடையிலும் போக்கு வரவு செய்ய இங்குள்ள மக்கள் இக்கட்டுப்பாட்டினாற் கஷ்டப்படுகிறார்கள். புருஷனும் மனைவியும், தாயும் மகளும், தகப்பனும் மகனும் ஒருங்கு ஆவசியகம் பிரயாணஞ் செய்யவேண்டி நேர்ந்தாலும், இவர்கள் இருவருக்கிடையில் ஒரேயொரு பிரயாணச்சீட்டு மாத்திரம் உதவப்பட, மனைவியை விட்டுப் புருஷனும், புருஷனை விட்டு மனைவியும், இப்படியே பெற்றோரைப் பிரிந்து பிள்ளையும், யாரேனும் ஒருவர்தான் பிரயாணஞ் செய்ய நேருகின்றது. இதனாற் பெரும் பானமையும் இருவரும் போகாது நின்றுவிட வேண்டியும் ஏற்படுகின்றது; புகைரத மார்க்கமாகப் போய்ப்பாய் அயலூர்களில வேலைசெய்து அன்றடித்து அன்று வயிறு வளர்ப்பவர்களாகிய ஏழைக் கூலிக்காரரும் பிழைப்பின்றிக் கஷ்டப்பட நேர்தலாயிற்று. இக்காலத்தில்பஸ்முதலிய வாகனமாக்கமாகப் பிரயாணஞ் செய்யலாமோவென்றால் அதுப் பிரயாணமபெரும் பொருட் செலவிற்கும்பிராண சங்கடத்திற்கும் ஏதுவாயிருக்கின்றது புகைரதப் பகுதியார் ஒரு குறித்த காலவரைக்குமே இக்கட்டுப்பாட்டைச் செய்துள்ளாராயினும் சனங்கள் அவ்வளவு காலத்திற்கும் படுங்கஷ்டமும் வசதியீனமுமாசித்தற்கரியனவாயிருக்கின்றனவே! வேற்றூர்களிலிருந்து படிக்கச்சென்ற மாணவர்களுட்பலர், தங்கள் கல்லூரி விடுகலையாக, அக்கல்லூரிக்குரிய விடுதிச்சாலை மூடப்பட, தங்கள் ஊருக்கு மீண்டுசென்று சேர வகையறியாது இடர்ப்படுகிறார்களாமே. இந்தப் புகைரதப் பகுதியதிகாரிகள் இப்படியான கடடுப்பாட்டைச் செய்தற்கு முந்திச் சிறிது யோசிக்கலியானார்!

புகைரதப் பகுதியில் புதிய சாமான் வண்டிகள்

அதிக நீளமும் கூடிய இடவசதியு முள்ளவை

சாமான் ஏற்றி யனுப்புவதற்கான புதிய புகைவண்டி யொன்றைப் புகைரதப்பகுதி அதிகாரிகள் இப்பொழுது உபயோகித்துவருகின்றனர். ஓர்டர் செய்யப்பட்ட 250 வண்டிகளில் சில இப்பொழுது வந்து சேர்ந்துவிட்டன.

நான்கு சக்கரங்களே உள்ள இவ்வண்டிகள் கனகுறைவுள்ளவையாகும். இவை அதிக நீளமுள்ளவை. ஒவ்வொன்றும 17 தொன சாமான்களைக் கொள்ளக்கூடியது. இப்படிப்பட்ட வண்டியே இதுவரைவிற் சிறசில பகுதிகளில உபயோகத்திலிருந்துவருகின்றது.

நேரான பாதைகளில் மட்டும் உபயோகிக்க ஏற்றவை.

இவ்வண்டிகள் உறுதியாக இங் கனுப்பப்பட்டுப் பூட்டப்பட்டன. இவை எப்பகுதிகளிற் போக்கு வரத்துக் கேற்றவை யென்று அறிவதற்காகப் பரீட்சார்த்தமாகப் போக்குவரத்துக்கு விடப்பட்டன. இவற்றின் நீளம் காரணமாகப் பாதை மிகவும் வளையும் பகுதிகளில இவற்றை உபயோகிப்பது கஷ்டமாகும்.

எனினும், அதிக சாமான்கள் கொள்ளக்கூடியவை. ஆதலால இவற்றைச் சில குறிகளிற் போக்கு வரத்துக்கு விடுவது வசதியாக விருக்கும். இப்பொழுது இவ்வண்டிகள் தினந்தோறும் கொழும்பிலிருந்தும் கொழும்புக்கும் போக்கு வரத்துச் செய்கின்றன.

இப்பொழுதைய புகைரதப்பகுதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இவ்வண்டிகள் உதவியாக விருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பூரீராம நவமி

சென்ற சனிக்கிழமை யன்று யாழ்ப்பாணம் இந்து மைடலத்தாரால் வண்ணை சாரதாமடத்திலிப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் மிகக் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. "ஸ்ரீ இராம ஜனனம்" என்னும் பொருளமைந்த கதாப்பிரசங்கமும் பல அரிய சங்கீதக் கச்சேரிகளும் நடைபெற்றன.

வித்தியா நவநெறி—பெற்ற மாணவி

கட்டுடைச் சைவ வித்தியாசாலை மாணவி ஜெயமணி, இராமநாதன் என்பவர் சென்ற கார்த்திகைமாதம் நடைபெற்ற, வித்தியா நவநெறி யைப் பாராட்டிப் பரிசாகிய ரூபா 1200/- பெற்றாளாம்.

உலகம்பலவிதச் சிறுகதை

[ஒரு ஆங்கிலப் பத்திரிகையிலுள்ள கதையை ஆதாரமாகக்கொண்டு எழுதியது]

நீ சாதியில் திருடனா? இடையிட்ட திருடனா?

மேன்மாடத்தோடுகூடிய மாளிகை போன்ற உந்நதமான வீடு; முற்பறத்தும் இருபுறத்திலும் பூந்தோட்டம்; பிம்பறத்தே காய்கனிகளைத் தரும் மரங்கள் செறிந்துள்ள வளவு. நேரம் இரண்டோடு கூடிய இரவு இரண்டு மணிவரையிலிருக்கும். கீழ்வீட்டிலுள்ளதாகிய தனது படுக்கையறையிலே சுகுணம்பிகை சயனத்திற் படுத்துக் கிடக்கிறாள்; ஏதோ ஒரு தீபகனாங்கண்டு கொண்டு கிடந்தவள் தன் படுக்கையறைக்கு அடுத்த அறையுள் ஏதோ அரவங் கேட்க, கண்டகனவும் நித்திரையும் இடையில் "முறியக்' கண்விழித்தாள். பின்னரும் அங்கே சத்தங் கேட்பதை அவதானித்தாள்; தன் படுக்கையைவிட்டு மெல்ல எழுந்து, அங்கு அமைக்கப்பட்ட மின்சார வெளிச்சத்தைச் செய்யுங் கருவியைத் தட்டவே வீடெங்கும வெளிச்சமுண்டாயது. அப்படிச் செய்துவிட்டுச் சுகுணம்பிகை தன் தலைமாட்டில் தலையணையினகீழ் வைத்திருந்த திறப்புக் கோவையை மெல்ல எடுத்துக் கொண்டுபோய் அகக்கோவையிலுள்ள ஒரு திறப்பினால் அடுத்த அறைக்குப் போதற்காகிய கதவை அதிக சத்தமின்றித் திறந்துகொண்டு அந்த அறையுட் போனாள்; சுகுணம்பிகையின வயசு இருபத்தெட்டு இருபதுதானபடி என உத்தேசிக்கலாம்; சிறந்த ரூபலாவண்யமுடையவள்; தமிழும் ஆங்கிலமும் நன்கு படித்தவள்; அவளுடைய இயற்கைப்பழக்கோடு கலவியழகும் சேர்ந்து அவளைப் பேரழகியாக்கியது. உத்தம மகளிர்க்குச் சொல்லப்பட்ட இலக்கணங்களனைத்தனையுந் தாமாகத் தெய்வந்து அவளிடத்திற் குடிகொண்டனவெலாம். சுகுணம்பிகையினது இந்நிலைப்பெயர் அவட்குக் காரணப்பெயராக அமைந்ததன்று சொல்லினும் பொருளும். வசீகரமான முகம்; கருணை மழிவுங் கண்களா. என்ன அழகுதம! அந்த அறையிலே ஒரு நிருடன் ஒளிக்க வைக்கப்பட்டிருந்த வெளிப்பாதகனாகிய ஒருவனைத் தன் ஒரு கரத்தினால் தனித்தனி பிடித்தபடி, சரீரம் நடுங்கத் தலை குனிந்தபடி நிற்கிறான்; சுகுணம் வந்ததைக் கண்டமாத்திரத்தே அவளை வெருட்டியபடியும் கோபக்குறிகாட்டி உற்றுப் பார்க்க முயன்றான்; ஆனால் தன் பார்வையாற் சுகுணத்தை வெருட்ட அவனால் முடியவில்லை; அவளது கையிலவ்வகையான ஆயுதமிலலையென அவதானித்த சுகுணம் அதிகமுடனுக்குச் சமீபத்திற் போக, அவன் அவளை வெருட்டியோட்டலாமென மெண்ணிப்போலும் தன் பறகளை நெருநெருவெனக் கறித்து கண்களிற் கோபஞ்சிந்த 'ஏமட்டுப்' பார்த்தான்; அந்தக் கண்களைத் தன்னை வெருட்டச் செய்யும் பயங்கரிகளைப் பார்த்துச் சுகுணம் மெல்லச் சிரித்தாள்; உடனே தன் சிரிப்பை யடக்கிக்கொண்டு அவனை உற்றுப் பார்த்தாள்; தான் நிசமான திருடனென்று அவனே சத்தியஞ் செய்தாலும், அவனுடைய தோற்றம் அவனைத் திருடனென்று நினைக்க விடமாட்டாது. முப்பது முப்பத்தாறு வயசு மதிக்கலாம் உயர்ந்த மெல்லிய தோற்றமுடையவன்; வறுமைப் பிணியாற் பீடிக்கப்பட்டவன்; நல்லாயிருந்து கெட்டவன் என்றே அவனைப் பார்த்தவரெவரும் எண்ணுவார்கள்; உடுத்த வெள்ளை வேட்டியும் இடையிடையே கிழிந்துதுவாங்கண்ட 'ஷேட்' எனப்படும் உட்சட்டையுமல்லாமல் அவனுடைய தேகத்தில் வேறு எவ்வகையான உடையுங் காணப்படவில்லை; அவனுடைய தோற்றத்தையும் நிலையையுங்கண்டு சுகுணம்பிகை தன்னி—த்துள்ள அற்பபயமும் நீங்கியவளாய்ச் சிறிது கோபங் கொண்டாள்போல் அவனைப் பார்த்து "ஏ, நீ, சாதியில் திருடனா? இல்லையேல் இடையிட்ட திருடனா? உள்ளதைச் சொல்லிவிடு; கதவுகளெல்லாம் பூட்டப்பட்டிருக்க இந்த அறைக்குள் எப்படிப்புகுந்தாய்? உண்மை சொன்னால் தப்புவாய்" என்று அதட்டிக் கேட்டாள். திருடன் கலக்கங் கொண்டான்; சரீரம் நடுங்கக் காணப்பட்டான்; கண்களில் நீர் ததும்பியது; "அம்மா, இந்த யன்னறகமபியில் இரண்டைப் பேர்த்துவிட்டு இந்த அறையுட் புகுந்தேன்; நான் சாதியிலுந் திருடனல்லேன்; ஆதியிலுந் திருடனல்லேன்" என்று தடுமாறச் சொல்லிவிட்டு அப்பாற சொலலமுடியாமற கண்ணீர் தாரைதாரையாகப் பெருக நின்று அழுதான்.

"பயப்படாமற் சொல்லு"

சுகுணம்பிகை இயல்பிலேயே இரக்கம் முதலிய சுகுணங்களோடு கூடியவளென்பது முந்தியே சொல்லப்பட்டது. அந்தத் திருடன் நின்று நடுங்குவதையும் அவன் கண்களில்நின்று நீர் தாரை தாரையாகச் சொரிவதையும் அங்ஙனஞ் சொரியுங் கண்ணீரைத் தான் இட்டுள்ள சட்டையின் முன்கைப் பக்கத்தால் துடைப்பதையும்பார்த்தமாத்திரத்தே சுகுணம்பிகையின் உள்ளம் வெயிலிடைப்பட்ட வெண்ணெய்போல உருகலாயிற்று. அவள் அவனைப் பரிவுடன் பார்த்து "அப்பா, கன்னப்பிள்ளைகள் போல் அழாதே, உண்மையில நீ திருடனல்ல; இந்தச் செய்யாத செயலைச் செய்யும்படி உன்னைத் தூண்டிவிட்ட பொல்லாவிதி என்னவென்பதைப் பயப்படாமல் மெல்லச் சொல்லு. உனக்கு நான் எவ்விதஆபத்தும் நேரவிடமாட்டேன்; என்னை நம்பு" என்று ஆதரவுடன் சொன்னாள். இப்படிச் சொல்லும்போது சுகுணத்தின் கண்களில் நீர் ததும்பியது. இந்த இதமான வார்த்தைகள் தன் செவியிற் படுதலும் அந்த மனுஷன் கவலை அதிகரித்தவனாய், தன் கையிலிருந்த வெள்ளிப் பாத்திரங்களை மெல்லக் கீழ் வைத்துவிட்டுக் கண்ணீரைத் துடைத்தபின் தனது இரண்டு கைகளையும் விரித்து நீட்டியபடி சுகுணம்பிகையைப் பணிந்து, "அம்மா, என வாலாறு மிகப் பரிதாபமானது, அதனைச் சொல்லி உங்களைத் துயரப்படுத்த எனக்குப் பிரியமில்லை; தாயே! உங்களுக்குக் கோடி நமஸ்காரம், ஒருநாளுஞ் செய்யாத செயல் நினையாத, என் மனச்சாட்சிக்கு மாறான காரியத்தைச் செய்ததுண்டு, அகப்பட்டேன்; மானங்கெட்டேன்; அம்மா, புண்ணியவதி! என்னை அவமானப் படுத்த மாயலுக்கு அனுப்பவேணாடாம்; நான வந்தவழியே போகவிட்டு விடுங்கள்" என்று சொல்லி அழுது குமபிட்டான்; அந்தப் பரிதாபத்தைப் பார்க்கவும், அவன் சொல்லும் ஆரப்புரைகளைக் கேட்கவும் சுகுணத்தின் மனம் சகிக்க

தொடர்ச்சி ௫-ம பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானும் பார்வதிதேவியாரும் சூதாடினதாகக் கூறப்படும்

புராணக்கதையின் உண்மைப்பொருள் இன்னதென்பது

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

நாவலர் சரித்திரத்தின் 15-ம் பக்கத்தில் கைலாசத்திலே சுவாமியும் தேவியும் சூதாடின கதையின் ஞானார்த்தத்தை நாவலர் ஓர்நாள் செந்திநாதையருக்கு விளங்கப்படுத்தியதாகவும், ஐயர் அக்கருத்தைத் தாம் வெளியிட்ட "சிவனுந் தேவனு என்னுந் தீய நாவுக்கு ஆப்பு" என்னுஞ் சிறு நூலில் எழுதியிருப்பதாகவும் கூறப்பட்டுளது. ஐயர் எழுதிய சிறு சுவடி சென்னை இந்துமத துண்டுப்பத்திரிகைப்பிரசார சபையாரால் 1890-ம் வருஷத்தில் வெளியிடப்பட்டது. அது இப்போது கிடைத்தற் கருமையானபடியால் ஷை விஷயத்தைப் பலருக்குந் தெரியும்படி ஈண்டு அனுவதிக்கின்றேன்.

சிவன் சூதாடினமைக்கு ஞானார்த்தம் ஈதென்பது

காமம் ஆகாது என்று சொல்லும் பொது வசனத்தால், தன் மனைவியைக் காமுறுதல் குற்றமாகக் கொள்வார் யாவர்? ஒருவர் பொருளை மற்றொருவர் அறியாது கவர்தல் களவாமென்பது பொது வசனமாய முடிய, ஒருத்தி தன புருஷனோடு மோபத்துத தன உயிரை நீக்க நினைந்து, நஞ்சு வாங்கி ஓரிடத்தில் எல்லோரும் நித்திரைபோயபினன், எடுத்துண பேமென்று தன தோழிகு மாத திரஞ் சொல்லிவைப்ப, அதனை யறிந்த தோழி அத தலைவி நஞ்சுண்டு சாவாளெனனும் பயத்தனாலே அந்நஞ்சை வைதத இடத்தினின்றும் கவர்ந் தெறிந்துவிட்டு வந்து சயனிக்கவும் தலைவியானவள் தான் போய்ப் பார்த்தபோது அது காணப்படாமையால் தோழியை வினவவும் அவள் தான எடுக்கவில்லையென்று சொல்லுவாளாயின, அவளைத் தலைவ உயிரைக் காத்த புண்ணியவதி யென்று சொல்லாது திருடியென்றும், பொய்யளென்றும் கபிக்கைத துரோகியென்றும் சொல்லுவார் யாருமில்லை. "பதாமாதாவுகுகு கீழ்ப்பட" என்று முனனர்ச் சொல்லிவிட்டு, பின்னர் விக்கிரகத்தை வணங்கு என்றும், கிறீஸ்துமதப் பிரவேசஞ் செய்யாதே என்றும் சொல்லும் இந்து பிதாமாதாக்களுடைய சொல்லைக் கேட்க வேண்டா மென்று போதிக்கும் கிறீஸ்தவர் யாம் சொல்லிய இவற்றைத் தடையின்றி அங்கீகரிப்பாரன்றோ? சரியை ஆதி நான்கு பாதங்களுக் அரும்பு மலர் காய் கனிகள் மீப்பலவனவா மென்றும், அந் நான்குபாதங்களும் சூழாட்டத்தில்லவைகளாகப்படும் கருமை பச்சை சிவப்பு மஞ்சட் காய்களாமென்றும் சரியையிற சரியையாதி பதினாறு பாகங்களுக் கருமை முதலிய ஆனதைகளாகிய நிலவகைக் காய்களின் வரிவாய பதினாறு காய்களாமென்றும், பாய்ச்சப்படுகின்ற கவுகள் இரண்டும் அபானன பரானனைகளாமென்றும் விந்துமிற்ற ழுக பழுத்தலாமென்றும் ஆன்மதத்துவமாகிய இருபத்தாறான்கும் கடந்த பிரகருதி அபினன சிவத்தாபாதாளத்மவிஷ்ணுவென்றும், அந்த மரியாதைப் பாயவென்றும் நிலைகடந்து ஆபரணுளன சுத்தமாகிய குடையின்ய பாயபு வடிவென்றும், அவ்வடிவ ஆந்த வஷ்ணுவாய ஸந்தாமென்றும்; இவ்வாறு வகைக் டாரிகைகசத்தமென்ன இவ்வாறாக தருவகைபாய நிறை வஷ்ணுவென்றும், அநிதிபப பிரபஞ்சத்தாய நிலைமையாகிய மிரியமய பொயவை மூலைக்கப்பட்டத்தனமும், மலையை வ்வளறமைய ஸ்ரீ சுவ்ன மவனருமென்றும், சிவசத்தியாய பலைட்டாக நீ கமை சத்தமிதாறற மமனதும் ஆபுப பொருள் குறித்து நிறை தறியாது, சூது பொய் என்னுஞ் சொல்லைக் கண்டபோதும், கேட்டபோதும் சிவன் சூதாடினு சிவனப்பய் சொனனுர் என்று தடிப் பொருள் கொண்டு தூஷிப்பது அஞ்ஞான மதத்தாராகிய மிலேச்சர் மதமாமெனக.

சைவ வைஷ்ணவ பேதங்கள்

[சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்]

'பக்தர்கள் ஏதேனும் ஓர் அசேதன வஸ்துவை வைத்துக்கொண்டு இதை உனக்குத் திருமேனியாகக் கொள்ளவேணும் என்றால், அதை எம்பெருமான் திருமேனியாகக் கொள்ளும்" என்று பெரியவாச்சான் பிள்ளை இக்கப் பாசுரத்தை விளக்குகின்றார். இதற்கு ஓர் அழகான நிகழ்ச்சி, எம்பெருமானார் ஜீவிய சரித்திரத்தில் நடந்ததைச் சொல்லுகிறார். ராமானுஜர் ஒரு நாள் ஸ்ரீரங்கத்தில் அட்சய பாத்திரம் எடுத்துத் தெருவில் போய்க் கொண்டிருந்தார். பிச்சையாகத்தந்ததைச் சமைத்து உண்பது ஒருவிதம். வீதியில் விளையாடிக்கொண்டிருந்த சில சிறு குழந்தைகள் மணணில காலாலே கீறி, உம்முடைய எம்பெருமான் திருமேனி" என்று காட்ட, உடனே பாத்திரத்தைக் கீழே வைத்துத் தண்டனிட்டருளினாராய! பின் அந்தக் குழந்தைகள பெரிய திருமண்டபமும் பெருமாளும் நாச்சியாரும் மணணில் கோடு கழித்துக் நற்றித்து பெரிய கோயில் வேதன வழக்கத்தைபோல துணிபரப்பி, அதனமேல் அனனதத்தை ராசியாகக் குவித்து அமுது செய்வித்துபோல விளையாட்டு நிவேதனமணணி, "எம்பெருமானாரே! பிரசாதபடும்" என்று மதநுமணலைக் கையாலே முகந்து எடுத்துக்கொடுக்க, உடையவர் அதைப் பாத்திரத்திலே வாறார்! குழந்தைகள் காலாலே கீறிய மேனியே உடையவருக்குத் திருமாலாயிற்று. அவர்கள் எடுத்துக்கொடுத்த மணலே உலகத பிரசாதமாயிற்று!

பொன்திகழு மேனிப் புரிசடையும்
புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்—
என்றும்
இருவரங்கத் தால்திரிவ ரேனும்,
ஒருவன்
உருவனங்கத் தென்று முளன்.

"பொன திகழும் திருமேனிப புரிசடையும் புண்ணிய' னான சிவனும் திருமாலும் முறையே அனவவன வடிவததில் நின்று திருவிளையாடலகள செய்தாலும் ஒருவன உடலில மற்றொருவன எப் பாதி உளன. பரஸ்பரம் சரீரசரீரியாவார்கள்.

பேயாழ்வார்
தாழ்சடையும் நீண்முடியும்
ஒண்மழுவும் சக்கரவும்
சூழரவும் பொன்னாணும்
தோனறுமால்—சூழும்
திரண்டருவி பாயும்
திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்று யிசைந்து

சடை மழு அரவு-இவைகொண்ட ஹரரூபமும் முடி சக்கரம் பொன்நாண் - இவைகொண்ட ஹரிரூபமும் இரண்டும் அமைந்து ஒரு படியாய்த் கருமலையில் பாருந்தியிருக்கின்றன

நாமழிசையாழ்வார்
தேருங்கால் தேவன்
ஒருவனே யென்றுணர்ப்பர்
ஆருமறிபா ரவன்பெருமை—ஓரும்
பொருள்முடிவு மித்தனையே
யெத்தவம் செய்தார்க்கும்
அருள்முடிவ தாழியான் பால்,

எல்லாச் சாதன அனுஷ்டானம் பண்ணினவர்களுக்கும் அவற்றிற் குப்பயன் சர்வேசுவரனிடமிருந்து நிச்சயமாக வரும்.

இடமாவ தென்னஞ்சம்
இன்றெல்லாம், பண்டு
படநா கணைநெடிய மாற்குத்—
திடமாக
வையேன் மதிசூடி தன்னோடு,
அயனைநான்
வையேனெட் செய்யேன் வலம்

முன் பாம்பணைமேல் படுத்திருந்தவன் தன் படுக்கைவிட்டு என் இருதயத்தை இருப்பிடமாகத் தேடி வந்திருக்கிறான், இது அவன் திருவாக்கு. என் நெஞ்சமோ சின்னஞ் சிறிய இடம். ஒருவனுக்கு மேல் இடமில்லை, ஆகையால் பிறை சூடிய சிவனுக்கும் பிரமனுக்கும் இடம்கொடுக்க முடியாது. ஒரு மூர்த்தியைத் தியானிக்கும் முறையின் தத்துவத்தை இது நன்றாக எடுத்துக் காட்டுகிறது.

நம்மாழ்வார்
அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையின்றனரே

அவரவர்கள் தத்தம் அறிவுக்குத் தகுந்தபடி அந்த அந்தத் தேவதையை ஈசன் என்று கொழுவார்கள். அந்த அந்தத் தேவதையும் தன்னை ஆராதிப்பவர்கள் வேண்டின பலன்களைக் கொடுப்பதில் சக்தி குறையாது. சர்வேசுவரன் எல்லாத் தேவதைகளுக்கும் ஆத்மாவாக இருக்கிறான அல்லவோ?

பிணக்கற வறுவகைச் சமயமும்
நெறியுள்ளி யுரைத்த
கணக்கறு நலத்தன னந்தமி
லாதியம் பகவன்
வணக்குடைத் தவநெறி வழிநின்று
புறநெறி களைகட்டு
உணக்குமின் பசையற வவனுடை
யுணர்வுகொண் டுணர்ந்தே

அறு சமயங்களையும் சந்தேகமும் கலவரமும் நீங்கத் தெளிவுபெறச் சமரசப்படுத்தி விளக்கிய கண்ணனைப் பக்தி பணணுங்கள் என்கின்றார் ஆழ்வார்.

உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்
துருவி
யந்தவிந் நிலைமை
உணர்ந்துணர்ந் துணரினு மிறைவனை
யுணர்வரி துயிர்காள்
உணர்ந்துணர்ந் துரைத்துரைத்
தரியய
னரனென்னு மிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத்
திறைஞ்சுமின் மனப்பட்டதொன்றே.

உயிர்காள பொருளகளின உண்மைப்பொருளை அறிந்துகொண்டாலுங்கூட, பரம்பொருளின இலக்கணங்களை அறியமுடியாது. அரி, அயன, அரன எனகிற இம்மூனறு மூர்த்திகளிலஉங்களமனசில இசுவரனனனறு தோன்றின ஒருவனைத் தியானித்துப் பழியுங்கள.

ஒன்றனப் பலவன வறிவரும்
வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முக
னரனென்னுமிவரை
ஒன்றநும் மனத்துளத துள்ளினும்
மிருபசையறுத்து
நன்றென நலஞ்செய்ய தவனிடை
நம்முடை நாளே

பரம்பொருளின இலக்கணம் உணர்வுக்கு எடுகாது. ஒன்று, பலவ எனறு அறியமுடியாது. நாரணன் நான்முகன் அரன எனறு பல பெயர்கொண்ட இநதப் பரம பொருளை மனதில ஒனறாகப் படியுமடி தியானித்து விருப்பு, வெறுப்பு எனகிற இரு பசைகளையும் நீக்கக்கரணடு ஈசனிடத்தல பக்தி பணணுங்கள.

வலத்தளன் திரிபுர மெரித்தவ
னிடம்பெறத் துங்கித்
தலத்தெழு திசைமுகன் படைத்தநல்
லுலகமும் தாமும்
புலப்படப் பின்னுந்தன் னுலகத்தி
லகத்தனன் தானே
சொலப்புகின் இவைபின்னும் வயி
ற்றுள
விவையவன் துயக்கே

திரிபுரத்தை எரித்த சிவன நாராயணனுடைய வலது பாகம். சதுர்முகப் பிரமமாவும் அவன் படைத்த உலகங்களும் திருமாலின் நாபிக்கமலத்தில் அடங்கும் பின்னும் உலகத்தில் மக்களின் கண்ணுக்குப் புலப்படும்படி சர்வேசுவரன அவதரிக்கவும் செய்கிறான். தவிர, இவ்வளவும் அவன வயிற்றில அடங்கக் கிடக்கும். இவை பரமாதமாவின

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)



தென் ஆபிரிக்க விமானத் தாக்குதற் படையால் தாக்கப்பட்டபோது, இத்தாலியிலுள்ள அல்படேனு என்னுமிடத்தில் ஜெர்மானிய வெடிமருந்து நிலையம் பற்றிஎரிந்து வெடித்து ஏகபுகைமயமாக இருப்பதை இப்படம் காட்டுகின்றது. "குண்டுவீச்சு மிக்க சித்திகரமானது", "நல்ல செயல்" என்னும் பாராட்டு அறிகுறிகள் இவ்விமானிகளுக்கு இத்தாக்குதலின்பின், எட்டாம் பிரிவுப்படை முன்னணித் தருப்புக்களால் தெரிவிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுஜன பாதுகாப்புப் பகுதி

ஜவுளி அறிவித்தல்

1944ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 3ம்திகதியிலிந்ருது சிறுதொகையாக கீழ்க்காணும் ஜவுளிகள், ஒவ்வொருஜாபிதாவுக்கும் நேரே குறிப்பிடப்பட்டிருக்கும் வருமான ஜில்லாக்களிலுள்ள கூட்டுறவு ஸ்டோர்களுக்கு விநியோகிப்பதற்கு கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் அந்தந்த ஜில்லாக் கிளை டிப்போக்களில் கிடைக்கும். கொழும்பு நகரிலுள்ள கூட்டுறவு ஸ்டோர்கள் ஜவுளிகள் வாங்க, கொழும்பு, கெய்ஸர்வீதி 67ம் நம்பருக்கு வரவேண்டும்.

ஸ்டோர்களின் பிரதிநிதிகள், குறைந்தபட்சம் இரு சங்க உத்தியோகஸ்தர்களால் கைச்சாத்திடப்பட்டுச் சங்கத்தின் லீல் வைத்து அதிகாரமளிக்கப்பட்ட ஆர்டர் ஒன்றை சம்பந்தப்பட்ட டிப்போவில் கொடுக்கவேண்டும். ஸ்டோரின் தனித்தனி அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கும் ரேஷன் சிட்டுகள் சம்பந்தப்பட்ட டிப்போவில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜில்லா	கிடைக்கும் ரகங்கள்	
மாத்தறையும்	ஆடவர் சரங்கள்	சாதாவர்ணம்
	சிறுவர் சரங்கள்	வொயில்
ஹம்பாந்தோட்டையும்	கைலேஞ்சிகள்	வெள்ளைத்துணி
	சாரிகள்	துவாய்த்துணி
	வேஷ்டிகள்	சலவை ஷீட்டிங்
	சால்வைகள்	மல்
	நரைத்துணி	இந்திய கைநெசவு சாரிகள்
	கோடுபோட்ட நிறத்துணி	
காலி	சிறுவர்சரங்கள்	கம்பாயங்கள்
	கைலேஞ்சிகள்	சாரிகள்
	நரைத்துணி	கோடுபோட்ட நிறத்துணி
	வொயில்	வெள்ளைத்துணி
	துவாய்த்துணி	சலவைஷீட்டிங்
	மல்	இந்திய கைநெசவு சாரிகள்
கொழும்பு	பொப்ளின்ஸ் டமயண்ட் ஸில்க்	பிஜாமா பொப்ளின்
		கோடுபோட்ட நிறத்துணி
	சாதாவர்ணம்	மாட்டிங்
	வொயில்	துவாய்த்துணி
	வெள்ளைத்துணி	
மாத்தளை	சால்வைகள்	நரைத்துணி
	கோடுபோட்ட நிறத்துணி	சாதாவர்ணம்
	துவாய்த்துணி	வெள்ளைத்துணி
	மல்	சலவைஷீட்டிங்
குருநாக்கல்லும்	ஆடவர் சரங்கள்	சாதாவர்ணம்
	சிறுவர் சரங்கள்	வொயில்
நுவரெலியும்	கைலேஞ்சிகள்	வெள்ளைத்துணி
	சாரிகள்	துவாய்த்துணி
	வேஷ்டிகள்	சலவைஷீட்டிங்
	சால்வைகள்	மல்
	நரைத்துணி	இந்திய கைநெசவு சாரிகள்
	கோடுபோட்ட நிறத்துணி	
மட்டக்களப்பு	சாரிகள்	வேஷ்டிகள்
	சால்வைகள்	நரைத்துணி
	சாதாவர்ணம்	வொயில்
	வெள்ளைத்துணி	துவாய்த்துணி
யாழ்ப்பாணம்	சாரிகள்	வேஷ்டிகள்
	சால்வைகள்	நரைத்துணி
	கோடுபோட்ட நிறத்துணி	சாதாவர்ணம்
	வொயில்	வெள்ளைத்துணி
	துவாய்த்துணி	சலவைஷீட்டிங்
	மல்	
கண்டி	நரைத்துணி	கோடுபோட்ட நிறத்துணி
	சாதாவர்ணம்	வெள்ளைத்துணி
	வொயில்	சலவைஷீட்டிங்
	துவாய்த்துணி	இந்திய கைநெசவு
	மல்	

(G 67 3 & 6.4.44)

திருக்குறள் ஆராய்ச்சி

[இணுவை, வை. அனவரத விநாயகமூர்த்தி]

(முற்றொடர்)

[ஆகவே, திருவள்ளுவரைச் சமயம் யாது? என்ற எச்சமயத்தார் பக்கமும் சாராமல் நடுநிலையின் நின்று முடிவு காணுமிடத்து, சில குறட்பாக்கள் சில சமயங்களுக்கு அநுகூலமாகக் காணப்படினும் பல அவற்றிற்குப் பிரதிகூலமாகின்றன. ஆசிரியர் வள்ளுவர் மெய்கண்டவராதலின், "சமயக் கணக்கர் மதிவழி கூறு, நூலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்" என்று கல்லாடத்தில் கூறப்பட்டபடி, அவர் சமயக்கணக்கர் தம்திறங் கடந்து சர்வ சாதியாரும், சர்வ சமயத்தாரும், சர்வ காலத்தவரும், தம்நூலை 'எம் நூல்! எம்நூல்!! என்று சொல்லித் தழுவுமாறு உலகியல் பற்றித் தமிழருக்கும் ஆரியருக்கும் பொதுவான சமரச நீதிநூல் செய்வாராயின ரென்பதே பெறப்படும். ஒழுக்கங்கள் போதிக்க நூல செய்யவந்த குருமணியான திருவள்ளுவர் ஆவ்வச் சமயக்கடவுளர் பெயர்களையும், அவ்வச்சமயக் கொள்கைகளுள் சிறந்தன சிலவற்றையும் தழுவித் தம ஒழுக்க போதனைகளுக்கு ஆதாரமாக வைத்துக் காட்டுவாராயின ரென்பதே துணியப்படும். இவ்வாறினறி ஒன்றொடொன்று ஒவ்வாமல் மாறுபடுஞ சமயங்களுள இது பொய், அது மெய் என்று பிணங்காமல் எல்லாச் சமயங்களையும் உண்மைப் பொருளை அறிவதற்குரிய சோபானங்களாகவும், அவை எல்லாவற்றையும் தனக்கு உறுப்புக்களாகவும் தழீஇக்கொண்டு நடுநிலையில் நிற்குஞ சமயம் யாதோ ஆதே எல்லாராலும் தழுவற்பாலதாகிய உண்மைச் சமயமாதலின் இத்தகைய இலக்கணமுடைய சமயம் ஒன்றை ஆசிரியர் தமக்கெனச் சமைத்துக்கொண்ட ஒழுக்கநூல் எழுதலாயினர் என்றும் கருதலாகும்.] இவை, உயர்திரு சுவாமி உருநாதரகோமகுமார திருவள்ளுவரது சமயத்தைப்பற்றிக் கொண்ட கருத்தாகும். நாயனார் எச்சமயத்தவராயிருந்தாலும் அவர் இயற்றிய திருக்குறளின் சிறப்பையே நாம கவனிக்கவேண்டும்.

வேறு தமிழ் நூல்களிற் காணப்படாத சில சிறப்பியல்புகள் திருக்குறளுக்கு உண்டு. நூற்பயனாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றைத் தெளிவாகக் கூறும் நூல்களுள் குறளுக்கு இடனாது வேறில்லை. திருவள்ளுவமாலையும் திருக்குறளையும் பாராட்டும் திருவள்ளுவமாலை யென்ற ஒரு நூல இருக்கின்றது. அதிலுள்ள செய்யுட்களைப் பல புலவர்கள் பாடியுள்ளார்கள். இங்ஙனம் ஒரு நூலைச் சிறப்பித்துப் பாடிய தனி நூலொன்று வேறு எந்த நூலுக்கும் முற்காலத்தே அமைபவில்லை. திருக்குறளுக்கு உரையெழுதியவர் பதின்மரென்று தெரிகின்றது. இங்ஙனம் பதினமர் உரையெழுதிய நூலும்வேறொன்று இல்லை. எல்லாவற்றிலும் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்தது. இரகசேச வெண்பா, சிவசிவ வெண்பா, நீன்கா வெண்பா, வடமலை வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா முதலியன திருக்குறளுக்கு உதாரணம் கூறும் நூல்கள். உரைவகைகளில் உதாரணம் கூறுதலும் ஒன்று. ஆதலின், முற்கூறிய நூல்கள திருக்குறளின் உரை நூல்களெனக் கூறுதல் தகும். குறட்கருத்துக்களைப் பலரும் எடுத்துக்கையாளுகின்றனர். இத்திருக்குறளானது தமிழ்ப் புலவர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட நூல்களுள் முதன்மை பெற்றது. குமரகுருபரர் இயற்றிய நீதிநெறி விளக்கம் நூலும் குறட்கருத்துக்களைச் சுருக்கமாகவேனு உருவகத்தால் விளக்கிச் சொல்லுகின்றது. இத்திருக்குறளுக்குத் தனிமையான ஒரு சிறப்புமுண்டு. ஏனைநூல், 'அகர முதல' என்று தமிழ்க்கடவுளை வணக்கமாக முதலாகிய அகரத்தில் தொடங்கி, 'பெறின்' என்று ஈறாகிய னகரத்தில் முடிகின்றது. ஆகவே இது தமிழுக்குச் சிறப்பாக அமைந்தநூல் என்று பெறப்படுகின்றது.

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அநாதியல்ல; பதி நிலையிடும் மறையிறந்தது எனுந்தற்குரிய மாநாதர்க்கு உதாரணமென உபாசகர்களாலெடுக்கப்படுகின்றமையும்,

இன்பம், வீடு என்று சொல்லப்படுகின்ற நான்கு பொருள்களுள்ளும் முதல் மூன்றுமே இந்நூலில் கூறப்பட்டது. இந்நூலும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. அறமாவது மனுமுகலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூன்று வகைப்படும் என்றார் பரிமேலழகரும். ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவரால் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக் கொள்ளப்பட்டது: அதுதான் இல்லறம் துறவறமென இருவகை நிலையாற் கூறப்பட்டது. இல்லறத்தைக் கூறத் தொடங்குமுன், தான் எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறினார். இல்வாழ்க்கையைப் பற்றி அவர் கூறும் கருத்துக்கள மிக அரியன. அவற்றின் திரண்டபொருள், இல்வாழ்பவன் எல்லாவற்றையும் பிறர்க்கு உபகாரம் செய்வதற்கே பயன்படுத்த வேண்டுமென்பதும், அவன் தன் உடலையும் பிறவற்றையும் பாதுகாத்தலும் அந்நோக்கத்திற்குத் துணையாக இருத்தல் வேண்டுமென்பதுமேயாம். பொருளீட்டுவதற்குரிய தொழில்களுள் உழவும் வாணிகமும் அவரால் தலைமையாக எண்ணப்பட்டன. இவற்றிலும் உழவு மிகச் சிறந்தது. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்—தொழுதுண்டு பின் செலவர்" எனபதே அவர்கொண்ட கருத்தாகும். திருவள்ளுவர் கற்பின் உயர்வைத், தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்—பெய்யெனப் பெய்யு மழை" எனபதனாற் தெரிவிக்கின்றார். தெய்வத்தைத் தொழாமலும் கணவனைத் தொழுதலுமாகிய இக்கற்பு நெறியை மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் நன்கு விளக்குகின்றன. கற்புடைய பெண்ணை, 'பெண்ணெனினும் அஃதலாதவள் பெண்ணன்றெனினும் பெரியோர் கூறுவர்' ஆக்கருத்தையே வள்ளுவனார் "தற்காத்துத் தற்கொண்டானாற் பேணித் தகைசான்றவள்—வாழ்க்கைத் துணை" என்பதனால் வற்புறுத்தினார்.

"குடிமகட்குத் தெய்வம்
கொழுநனே மன்றி
புதல்வர்க்குத் தந்தையும்
தாயும்—அறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குத்
தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை" என்ற

செய்யுளாலும் கற்பின் பெருமை புலப்படுகின்றது. ஒரு இடத்தில், திருவள்ளுவர், "குழலினி தியாழினிதென்ப தம்மக்கள்—மழலைச் சொற் கேளா தவர்" என்று மக்களது—பால்மணம் மாறாத இளம் பாலரது—மழலைச் சொற்களைக் கேளாதவர் குழல் இனிது; யாழ் இனிது என்று தம்முள் வாதாடுவர். இதே நாயனார் கொண்ட நோக்கமாகும். இதை வேறு இடத்தில் "மக்கண் மெய்தீண்ட லுடற்கின்ப மற்றவர், சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு" என்று கூறுகின்றார். இங்கு சொல்லென்பது மழலைச் சொல்லையே உணர்த்திற்று. ஆன்றோர் பலர் அன்பையே சிறப்பித்துக் கூறுவர். கடவுளும் அன்பே உருவாய அமைந்தவர் எனபது அவர்கள் கொண்ட துணிவு. இதனையே 'அன்பே சிவம்' என்று வாழ்த்துகின்றனர். அன்பை ஒருவராலும் தடுக்க முடியாது. இதையே நாயனாரும், "அன்பிற்கு முண்டோ வடைக்குந் தாழ் பார்வலர்—புன்கணீர் பூசறரும்" எனக் கூறுகின்றார். இனனும் அறத்துப்பால் எனனும் பகுதியில் விருந்தோம்பலின் சிறப்பையும், அது இல்வாழ்வானுக்குரிய கடமைகளுள் என்று எனபதையும் விளக்குகின்றார். மெய்ஞ்ஞானம் பெறுதல் முக்கியமாக ஒருவனுக்கு இருக்க வேண்டியது எனபதை, "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங் கண்ணென்ப வாழுங் உயிர்க்கு" எனனும் குறளால் தெரிவிக்கின்றார். இனனும் கல்லாமையைப் பற்றிக் கூறப்புகுந்த திருவள்ளுவர் 'கல்லாமறப்பதுங் கல்லாமை கல்லாமலல்லதை அல்லாமறப்பதுங் நன்று' என்றார், அதற்கு 'கல்லாதவர்க்கு காலத்தினாற் செய்தனன்று சிறிதாயினும் அது ஞாலத்தின் மணப்பாரிது' எனனும், 'கிளைத்துணை நன்றி செயினும் பகைத்துணையாய்க் கொள்ளுதல் பண்புடைமை யாகும்' என்றும் நயமபடக் கூறினார். இக்குறளில் அடங்கிய கருத்தையே கபிலரும் விரித்துரைக்கின்றார்:

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

வில்லை. அவள் தானும் பரிபவமுற்றுளாய், அவனைப் பார்த்து "அப்பா, நீயொன்றுக்கும் பயப்படாதே, அதிகநேரம் போக்காதே, என்கணவர் மேல்வீட்டிற் படுத்துறங்குகிறார்; அவர் விழித்தெழுந்தால் உன் கதி ஆபத்தானதாய் விடும்; உன் வரலாற்றைச் சொல்லிவிட்டு நீ மெல்லத் தப்பிப்போய்விடு" என்று மீட்டுஞ் சொன்னாள். இந்த ஆதரவான வார்த்தையைக் கேட்ட அந்த மனுஷன் பணிவுடன் அவளைப் பார்த்து, "அம்மா நான் ஒரு திருடனுமல்லேன்; துஷ்டனுமல்லேன்; நான் கிரமமாகப் படித்தவன்; படித்தபின் ஐந்து வருட காலமாக வேறூரிலுள்ள ஒரு வியாபார சமுதாயத்தில் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தேன், வேதனம் அதிகமில்லாவிட்டாலும் என் மனைவியோடும் இரு பிள்ளைகளோடுங் கூடிய என் குடும்பாட்சணைக்கு அந்த வேதனம் வறுமையிற் செம்மையாக வாழ்வதற்குப் போதியதாகவிருந்தது; ஆனால் இற்றைக்கு ஒருவருடத்துக்குமுன் நாட்டிலே நேர்ந்த மாறுதல்கள் பஞ்சம் முதலியவை காரணமாக, நான் பார்த்துவந்த வியாபார சமுதாயம் அல்லாமல் தாழ்ந்தது; அன்று தொடக்கம் பிழைப்பற்றவனுனேன்; இரு குழந்தைகளையும் மனைவியையும் பராமரித்தற்காக என் மனையாள் அணிந்திருந்த ஆபரணங்களையும், வீட்டிலுள்ள பொருள்பண்டங்களையும் நாளுக்கு நாள் ஒன்றொன்றாக விற்றுச் சீவியம் நடத்தி வந்தேன்; அவை முடிந்தபின் இருக்கும் வீட்டையும் ஈடுவைத்துப் பணம் பெற்றேன்; அந்தப்பணமும் செலவானது; இரண்டு மூன்று நாட்களாக நாங்களிருவரும் பட்டினியாக இருந்துகொண்டு எங்கள் குழந்தைகளுக்கு ஏதும் உணவு கொடுத்துவந்தோம். நேற்றுத் தொடக்கம் குழந்தைகளும் பசியினால் வருந்தக் கதறுகிறார்கள்; எழுமாசக் கருப்பிணியாகிய என் மனையாள் குழந்தைகளின் பரிதாபத்தையும் என் முகத்தையும் மாறிமாறிப் பார்த்து அழுவாளாயினள்; இந்தப் பரிபவங்களையெல்லாம் கண்ணுற்றுப் பார்க்கச் சகியாத நான் இக்குழந்தைகளையும் தாயையும் ஆற்றிலே கிணற்றிலே கொண்டுபோய் அமுக்கிவிட்டு உடனே நானும் உயிர்விட்டுமோ என்று நினைத்தேன்; நிரபராதுகளான மனைவிமக்களை, கருவிலிருக்குங் குழந்தையைக் கொன்றால் தீராப்பழி என்னைச் சூழுமென்று பயந்து அந்த எண்ணத்தை உடனே மறந்து, வீட்டைவிட்டுப் புறப்பட்டு செய்யாத இந்தச் செயலையாயினும் செய்து என் பெண்டிர் பிள்ளைகளின் உயிர் உடம்பைவிட்டு நீங்காது பாதுகாக்கலாமென்று துணிந்து வந்தேன் அம்மா, வந்த இடத்திலேதான் இந்த ஆபத்து வந்து நேர்ந்தது; அம்மா, எம்மா என் பெண்டிர் பிள்ளைகள் செய்த அறப் புண்ணியத்தினுற் போலும் வேறு வீட்டிற்போய்ப் புகாது சீமாட்டியாகிய உங்கள் வீட்டிலே வந்து அகப்பட்டேன்; என்னை ஓடிப்போக விடுங்கள் அம்மா, உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்" என்று பணிந்து இரந்து கேட்டான். இதற்கிடையில் "சகுணு உங்கே என்ன செய்கிறாய், இது என்ன வெளிச்சமெல்லாம் எரிகிறது" என்ற வார்த்தைகள் பிறந்தன. அவை தன் கணவன் வார்த்தையென்பதை யுணர்ந்த சகுணம்பிகை திடுக்கிட்டாளாய் கள்வனைச் சற்று நில் என்று சைகை காட்டிவிட்டு, தன் படுக்கையறைக்கு ஓடிப்போய், அங்கே தலையணையின்கீழ் வைத்திருந்த வர்ரா பொருளை எடுத்துக்கொண்டு வந்து கள்வனிடங்கொடுத்து "அப்பா, ஓடித்தப்பு" என்று சொல்ல, அவன் அதனை வாங்கிக்கொண்டு அவளைக் கும்பிட்டுவிட்டு வந்த வழியால் மீண்டான்; யன்னற் கதவைப் பூட்டிவிட்டுச் சகுணம்பிகை தன் படுக்கையறையுட் போய் மின்சார வெளிச்சங்களை அவித்துவிட்டு பழையபடி சயனத்திற் படுத்தாள்; நித்திரை குழம்பி விழித்தெழுந்த நாயகனும் [illegible] (வரும்)

'நாஜிபடைரை ருமேனியர் விரட்ட வேண்டும்'

மோலடாவ் அறிக்கை பற்றிக் கார்டல் ஹல்

வாஷிங்டன் ஏப் 3—

ருமேனியாவிலிருந்து ஜெர்மன் படைகளை ருமேனியர் அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கவே விரட்ட வேண்டுமென்று அமெரிக்க அரசாங்கக் காரியதரிசி மிஸ்ரர். கார்டல் ஹல் இன்று ருமேனியரை எச்சரிக்கை செய்தனர். அவர் மேலும் பேசுகையிற் கூறுவதாவது:— ருமேனியாவில் தற்பொழுது எடுக்கப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் பற்றி எம். மொலடாவ் வெளியிட்ட அறிக்கையைக் கவனமாகப் படித்தேன்.

அடைவுநகை விற்பனை

1893 ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் காங்கேசன்துறை செல்லையா செல்லத்துரை அவர்களிடம் 20.4.1940 முதல் 30.8.1942 வரையும் அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1944-ம் வருடம் வைகாசி 3-ந் திகதி புதன்கிழமை காலை 10-30 தொடக்கம் மேற்படியார் கடையிலிருந்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

க. பொன்னப்பா,
வெந்தீஸ்மேஸ்தர்&கொம்மிஷனர்,
இணுவில்.

Mis 3, 6. 10.4.44.

பொதுஜனப் பாதுகாப்புப் பகுதி

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்

கூட்டுறவு மொத்தவிற்பனை ஸ்தாபனத்தின் அலுவல் சம்பந்தமான, ஏராளமான உத்தியோக ரீதியான கடிதங்கள் கீழே கையொப்பமிட்டிருப்பவரின் சொந்த விலாசமிடப்பட்ட உறைகளில் வருகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்துடன் கடிதப் போக்குவரத்து நடத்தும் கூட்டுறவுச் சங்கங்களும் மற்றவர்களும் காலதாமத மேற்படா திருப்பதற்காக எல்லாத் தபால்களையும் ஸீனியர் உதவி ரிஜிஸ்ட்ராருக்கு உத்தியோக ரீதியாக அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். சொந்த விலாச மிடப்பட்டு வரும் கடிதங்களுக்குப் பதிலனுப்பும் பொறுப்பை கீழே கையொப்ப மிட்டிருப்பவர் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

ஸி. ரகுநாதன்,
ஸீனியர் உதவி ரிஜிஸ்ட்ரார்,
கூட்டுறவுச் சங்கங்கள்.

கொழும்பு, 31, மார்ச், 1944.

G 2. 6&10.4 44.

ஏல விற்பனை

வீட்டுத் தளபாடங்களும், மாபிளால் செய்த வட்டமேசை சாப்பாட்டு மேசைகளும், கோட்டல் சாமான்களும், மற்றும் பொருட்களும், யாழ்ப்பாணம் கடற்கரைத் தெரு டாக்டர் சுப்பிரமணியம் அவர்களின் வங்களாவுக்கு அருகாமையிலுள்ள "லேக்வியூ வில்லா" என்றழைக்கப்படும் Mr. K. A. பணிக்கர் அவர்கள் வங்களாவில் (சமீபத்திலே இலங்கையைவிட்டுச் செல்லவிருக்கிறார்) நிகழும் 1944-ம் ஆண்டு சித்திரை மாதம் 8-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரசித்தவேலத்தில் விற்கப்படும்.

கோணமலை ஐயாத்துரை,
வெந்தீஸ்மேஸ்தர்.

(Mis. 1. 6-4-44.)

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் காங்கேசன்துறை அல்விறத்நேச ராசா, விசுவலிங்கம் தர்மராசா.

—வழக்காளி

இல. 16925 - D. C. J.

எதிராக

யாழ்ப்பாணம் சீதாரி அம்பலவாணர் கைம்பெண் இராசநாயகி அம்மாள்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் மேற்குறித்த வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1944 ம் ஆண்டு சித்திரை மீ 29ந் உ சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூ. 1376. 1941-ம் ஆண்டு ஆவணிமாதம் 5-ந் திகதி தொடக்கம் ரூ 1-க்கு 100-க்கு 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூ. 198.67½ சதமும்.

காணிகளின் விபரம்

1. யாழ்ப்பாணம் விற்றோரியாறோட்டில் இருக்கும் K. சோதிநாகரத்தினம் பெண் அகிலாண்ட நாயகியின் பின் விபரிக்கும் காணியின் முழு உரித்துச் சோர்தை அதாவது, வீமன்காமம் இறை இலங்கினிசிட்டியும், அத்தி அடியும் பர. நிலை இல 37 ம் பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு, வயிரவகோவில் ஆதனமும், முருகர், மூத்ததம்பியும் பங்காளரும் வீரகத்தி தம்பிப்பிள்ளையும் பங்காளரும் இராசலிங்கம் கைம்பெண் அழகம்மாவின் ஆதனமும் பங்கும், வடக்கு றோட்டும், மேற்கு டக்ரர் நதானியலின் ஆதனமும், சோதிநாகரத்தினம் பெண் அகிலாண்ட நாயகியும், பங்காளரும், தெற்கு மேற்சொன்ன சோதிநாகரத்தினமும் பங்காளரும் கணபதி, சிவகுருவின் ஆதனமும் இது அளந்து கண்டபடி பர. நிலை. இலா 38 ம் 17½ குழியும்.

2. வீமன்காமம் இறை மேற்படிகாணி பர நிலை. இலா. 34, பனைகளும் எல்லை கிழக்கும் வடக்கும் சோதி நாகரத்தினம் பெண் அகிலாண்ட நாயகியின் ஆதனமும் பங்காளரும், தெற்கு, கணபதி சிவகுருவின் ஆதனமும் இது அளந்து கண்டபடி பர. நிலை. இலா. 34-ம 17½ குழியும் இதில் சொரியலாய் 3/2 பங்கும்.

3. வீமன்காமம் இறை மேற்படி காணி பர. நிலை. இலா. 55, பனைகளும வடலிகளும் எல்லை, கிழக்கு சோதிநாகரத்தினம் பெண் அகிலாண்ட நாயகியும், பங்காளரும், வடக்கு அகிலாண்ட நாயகியின் ஆதனம், மேற்கு, டக்ரர் நதானியலின் ஆதனமும் வேலுப்பிள்ளை கைம்பெண் பொன்னுச்சியும் மறுபரும், தெற்கு கணபதி சிவகுருவும், மறுபேரும் இதுஅளந்துகண்டபடி பர. நிலை. இலா. 57-ம் 9 குழியும் இதில் சொரியலாய் அரைவாசியும்.

க. பொன்னப்பா,
வெந்தீஸ்மேஸ்தர்&கொம்மிஷனர்.
இணுவில், 3-4-44.

Mis 2. 6-4-44.

அறிவித்தல்

யாழ்ப்பாண டிஸ்திறிக் பகுதியில் உப உணவுப்பொருட்கள் கொடுத்தல்

1944ம் ஆ ஏப்ரில் மீ 10-ந் உ திங்கட்கிழமை முதல் 16 ந் திகதி வரைக்கும் ஐக்கிய சங்கக் கடைகளல்லாத மற்றைய சில்லறை வியாபாரிகள்மூலம் அச்சில்லறை வியாபாரிகளிடம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூப்பன்காரருக்கும் பின்வரும் உப உணவுப் பொருட்களை விற்கும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

1 மல்லி ஒரு அவுன்ஸ்
2 கறுப்புப்பயறு அல்லது மைசூர்ப் பருப்பு அல்லது உழுந்தம்பருப்பு அல்லது பண்டோக்கடலை அல்லது துவரம் பருப்பு. ½ அவுன்ஸ்,
3 கடுகு அல்லது மஞ்சள் கால் அவுன்ஸ்,
4 புளி—1 அவுன்ஸ்.

2 தங்களுக்குச் சேரவேண்டிய உப உணவுப்பொருட்களை கட்டுப்பாட்டு உணவுப்பொருட்களுடன் பெற்றுக் கொள்ளலாமென இத்தாலறிவிக்கப் படுகின்றது.

(ஒப்பம்) E. B. திசைவீரசிங்கம்
வடமாகாண ஏஜண்டுதுரை
அவர்களுக்காக

யாழ்ப்பாணக் கச்சேரி

G 1. 6-4-44

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

வெள்ளி ஏப்ரல் 7

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 வானொலி வாத்திய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 தேரெழுந்தூர் டி வி சிறீனிவாசாச்சாரி பாட்டு 9 முடிவு

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எச் எஸ் மத்வாசார் கோட்டுவாத்தியம் 2 தமிழில்செய்திகள் 2-05 கேட்டைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 தேரெழுந்தூர் டி வி சிறீனிவாசாச்சாரி பாட்டு 5-40 தூரன் ஷரீப் 6 ஈஸ்டர் தேவாரகனை 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கியவாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 பி என் அங்கப்பபிள்ளை நாகஸ்வரம் 9 மஹோதான் ஒருசம்பவம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10 திரைச்சத்தம் 10-30 முடிவு.

சனி ஏப்ரல் 8

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 மணிப்ரவாளம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி பி ராமகிருஷ்ணன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 தந்தி இசை† 2 தமிழில் செய்திகள் 2-05 கே மகாதேவன்† 2-30 முடிவு.

மாலை 5 டி பி ராமகிருஷ்ணன்பாட்டு 5-40ஜீவசாக்ஷிமாலைவிளக்கம் 6டாக்கி இசை† 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15ஜப்பானிய சரித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 மதராஸ் அஞ்சல் 9-15 யமுனா கல்யாணி† 9-20ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இரு புல்லாங்குழல்கள் 10இசைவேளை 10-30 முடிவு.

ஞாயிறு ஏப்ரல் 9

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 டாக்கிஇசை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே ஆர் தங்கவேலு பாட்டு 9 முடிவு.

12 கதம்பம்† 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் கே கனகாம்பாள் வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 அரியக்குடி ராமானுஜ ஐயங்கார்† 2-30 முடிவு.

மாலை 5 கே ஆர் தங்கவேலு பாட்டு 5 30 ஈஸ்டர் தேவாரகனை 6 எம் கே கனகாம்பாள் வீணை 6-30ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நமதுதபால்பெட்டி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 அதுவழக்கம் பேச்சு 9-20ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 குழல் தூலிசை 10 இசைவேளை† 10-30 முடிவு.

திங்கள் ஏப்ரல் 10

காலை 7-45 சீதாரம்பம்† 7-50 தமிழ்செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கீரனூர் எம் ராமஸ்வாமிபிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி என் கங்காபாய் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை: 5 கீரனூர் எம் ராமஸ்வாமி பிள்ளை நாகஸ்வரம் 5.45 இசைப்பயிற்சி 6 பந்தணைநல்லூர் முத்தையாபிள்ளை வயலின் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்தச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழ்செய்திகள் 7-45 புத்தக விமர்சனம் 8 பந்தணைநல்லூர் முத்தையபிள்ளை வயலின் 8-30 புதிய ஆந்திராவின் பிரச்னைகள் 8-50 டி என் கங்காபாய் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45ஸ்வரவர்ஜனம் 10 இசைவேளை† 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ வைஷ்ணவ பேதங்கள்

3ம் பக்கத் தொடர்ச்சி

திருவிளையாடல்கள்.

ஒருவ ரிருவ ரோர்மூவ ரெனநின்று
உருவுகரந் துள்ளுந்தோறும் தித்திப்
பான்
திருமவர் மார்வன் திருக்கடித்
தானத்தை
மருவி யுறைகின்ற மாயப் பிரானே

திருக்கடித்தானம் என்கிற திவ்விய ஸ்தலத்திலுள்ள கோயிலில் பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்துக்கொண்டிருக்கும் பெருமான் ஒருவனாகவும் இருவராகவும் மூவராகவும் இருக்கின்றான். தன் உருவத்தை மறைத்து ஜீவன்களின் உள்ளத்திலும் இருக்கிறான்.

யானும் தானு யொழிந்தானை
யாதும்யாவர்க்கும் முன்னேனைத்
தானும் சிவனும் பிரமனும்
ஆதிப் பணைத்த தனிமுதலைத்
தேனும் பாலும் கன்னலு
மமுது மாகித் திகழ்தென்
னாவி லுயிரி லுணர்வினில்
நின்றவொன்றை யுணர்ந்தேனே.

பரமபொருளை இப்பாசுரத்தில் நம்மாழ்வார் வேதாந்த விளக்கமாக விளக்குகிறார். அதிலே "யான்" ஆகாது. யானும் தானும் ஒன்றாக முடிகிறது. அதுவே சேனாதிபதிக்கும் முந்தி இருந்த பரம்பொருள், அதுவே சிவன், பிரமன், விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளும் அந்த பரமபொருளை உணர்ந்தேன். அதுவே எல்லாவிதப் பொருள்களும் ஆகிறது. என சரீரம், பிராணன், உணர்ச்சி இவற்றில் அது உயிருக்கு உயிராகி நிற்கிறது.

இந்தப்பாட்டு அடங்கிய 78-ம் திருவாய்மொழியிலுள்ள பத்து பாசுரங்களில் வைஷ்ணவ சமயத்தின முழுத் தத்துவங்களும் இருக்கின்றன.

தானே யாகி நிறைந்தெல்லா
வுலகு முயிரும் தானேபாய்த்
தானே யானென் பானுகித்
தன்னைத் தானே துதித்தெனக்குத்
தேனே பாலே கன்னலே
யமுதே திருமாலிருஞ்சோலைக்
கோனேயாகி நின்றொழிந்தா
னென்னை முற்று முயிருண்டே.

இந்தப் பாட்டில் தர்ச்சாவதார உபாசனைக்கும் பரப்பிரம்ம உபாசனைக்கும் உள்ள பேதம் ஒழிந்தது.

அவனே யகல்ஞாலம் படைத்தி
டந்தான்
அவனேயஃ துண்டுமிழ்ந் தான
எந்தான்
அவனே அவனு மவனு மவனும்
அவனேமற்றெல்லா முமறிந்தனமே,
நாம் கண்டு கொண்டோம்.

அவனே உலகத்தைப் படைத்தவனும் சம்ஹரித்தவனும். அவதாரிகழ்ச்சிகள் கடத்தியனும் அவனே. அவனே திருமால், அவனே சிவன், அவனே பிரமன், அவனே ஜீவாத்மா முழுவதும்.

உருவாகி யாது சமயங்கட்
கெல்லாம்
பொருவாகி நின்று னவனெல்லாப்
பொருட்கும்
அருவாகி யவாதியைத் தேவர்கட்
கெல்லாம்
கருவாகிய கண்ணனைக் கண்டு
கொண்டேனே.

கண்ணன் என்பது பரப்பிரம்மமே, வெவ்வேறாக கிரமாணிக்கப்பட்ட ஆறு சமயங்களிலும் நீ சமமாய் நிற்கிறாய். எல்லாப் பொருள்களிலும் நீ அந்தராத்மாவாகவுமிருக்கிறாய். நீ சிருஷ்டி கர்த்தா. எல்லாத் தேவர்களுக்கும் நீயே கருப்பொருள் எனகிற உண்மையை அறிந்தேன்.

'சமயங்கட்கெல்லாம்பொருவாகி' என்றால், எல்லாச் சமயங்களிலும் நீ சமமாக நிற்கிறாய் என்பது பொருள். "கோதில் வண்புகழ் கொண்டு சமயிகள், பேதங்கள் சொல்லிப் பிதற்றும்பிரான் பரன்" என்று பாடியதும் இதுவே.

இலங்கத் திட்ட புராணத் தீரும்
சமணரும் சாக்கியரும்
வலிந்து வாது செய்வீர்களும் மறு
நுந் தெய்வமு மாகிநின்றான்
மலிந்து செந்நெல் கவரி வீசும்
திருக்குரு கூரதனுள்
பொலிந்து நின்ற பிரான்கண்டீ
ரொன்று பொய்யிலை போறறுமினே

வேறு சமயத்தினரைப் பார்த்து "உங்கள் தெய்வமும் என் குருகூரில் எழுந்தருளா நிற்கும்தெய்வமும் நான் சொல்வது பொய் அல்ல" என்கிறார்.

திருவாய்மொழி நூற்றந்தாதி பாடிய பத்தாம்.

அவாவறச் சூழியை யயனை யானை
யலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்
சடகோபன் சொன்ன
அவாவிலந் தாதிகளா லிவையாயிர
மும்முடித்த
அவாவிலந் தாதியிப் பத்தறிந்தார்
பிறந்தா ருயர்ந்தே.

என்று கடைசி உபமஹாராப பாசுரமான அமைத்துத் திருவாய்மொழியை முடிக்கிறார்.

சரித்திரம்

சரித்திரத்திற்கும் கதைக்கு முள்ள பேதத்தை அறியவேண்டியது அவசியம். சரித்திரம் உண்மையாகவுள்ளதை உள்ளபடி கூறுவது. கதை நடவாததை நடந்ததாகவும், சிறியதைப் பெரியதாகவும், பெரியதைச் சிறியதாகவும் சமயோசிதமாகக் கூறுவது. இவ்வித்தியாசத்தைக் கவனியாமலோ அல்லது வேறு யாது சுயநலங் கருதியோ சமீபத்தில் எழுதப்பட்ட சில தமிழ்ப் புலவர்களின் சரித்திரங்கள் உண்மைக்கு மாறுபாடாகக் காணப்படுகின்றன. இவ்வளவோ டமையாது அச்சரித்திரங்கள் பரீக்ஷைகளுக்கும் பாடமாக வைக்கப்படுகின்றன. இப்படிப் பாடமாக அமைந்த ஓர் புலவரின் சரித்திரத்தை யான் காண நேர்ந்தது. அப்புலவர் எனக்குத் தெரிந்தவராகலால் அவர்சரித்திரத்தில் ஆக்கியோரால் புகுத்தப்பட்ட அசம்பாவிதங்களை யெல்லாம் யான் நன்கறிந்தவனானேன். இப்படியான சரித்திரங்களைப் பாடத்தகமாக வைப்பது தமிழ்லக்கியத்தை வமாற்றுவதாகும். கொள்ளுதகாலும் உண்மை குறிப்பாகமாகவும் எழுதுதல் ஆடாது.

சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை,
27-3-44.

திருக்குறள் ஆராய்ச்சி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

"சிதைவகல் காதல் தாயைத்
தந்தையை, குருவை தெய்வப்
பதவி அந்தணரை, ஆவை
பாலரைப் பாவையரை
வதை டரிஞற்கும் உண்டாம்
மாற்றலா மாற்றல், மாயா
உதவி கொன்றார்க்கு என்றேனும்
ஒழிக்கலாம் உபாயமுண்டோ"

என்று கல்வியிற் பெரியாராய கம்பர் நன்றியின் பெருமையைக் கூறினார், இன்னும் திருவள்ளுவர், நடுவுநிலைமை, ஒழுக்கமுடைமை, அழுக்காறாமை, ஒப்புரவறிதல் முதலியவற்றிற்கும் ஒவ்வொரு அதிகாரம் தனித்தனி வகுத்திருக்கின்றார். கடைசியாக இல்லறவியலில், இவ்வாழ்வான் அடையக்கூடிய புகழைப் பற்றி நாலுர் எடுத்துக் கூறினார். இக்கருத்தையே "புகழுடை வாழ்வே மனத்தலக்ஷியம்" என்று ஆன்றோர் கூறுவர். இவ்வாழ்க்கை முதல் ஈறாகத் திருவள்ளுவரால் சொல்லப்பட்ட இல்லறத்தை வழுவாதார்க்கு இம்மை மட்டுமல்ல இவ்வுலகத்தின் கணிகழ்து இறவாது நிற்பது சீர்த்தி அல்லது புகழ். ஒருவனுக்குப் புகழ் கொண்டபால வருவதுபற்றி காயலூரும் 'ஈகை' எனனும் அதிகாரத்தற் கடுத்தபடியாக 'புகழ்' என்னும் அதிகாரத்தை வைத்தார்

—வரும்

பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவச உணவு

உணவுக் கோமிஷனரை பேட்டி காணத்தூதுக்கோஷ்டி

யாழ்ப்பாணம் ஏப் 3—

பள்ளிப் பிள்ளைகளின் நல உரிமைகளில் ஆர்வமுள்ள பாடசாலை நிர்வாகஸ்தர்களும் மற்றும் பலரும் நேற்று முன்தினம் நகர மண்டபத்திற் கூடினர். யாழ்ப்பாணப் பட்டினசபைத் தலைவர் திரு. ஸி. பொன்னம்பலம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் மாணவருக்கு இலவசப் பகற் போசனமளிக்கும் விஷயத்தில் யாழ்ப்பாணப் பட்டினசபை இலங்கைக்கு ஒரு வழிகாட்டியாக வருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.

தலைவர் மேலும் பேசுகையில்:- "பகற் போசன [illegible] மனிதனுக்கு [illegible] கூடாது [illegible] வேலையத்தில் [illegible] உதவியளிக்க [illegible] கரிலுள்ள பாழுக்கு [illegible] மதமாக [illegible] ககாதார அதிகாரி [illegible] விதத்தார்.

வித்தியாதிகாரியின் சுற்றறிக்கை

நான் இக் கூட்டத்தை நடத்த தீர்மானித்தபின், வித்தியாதிகாரி ஒரு சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறார், அதில் பட்டினசபைப்பகுதிகளிலுள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கும் மத்திய அரசாங்கம் ஒரு சாப்பாட்டுக்கு 6 சதவீதம் இலவச பகற்போஜனம் அளிக்க வேண்டுமென்றும், ஸ்தல ஸ்தாபனங்கள் அதற்காகப் பணஉதவி யளிக்க விரும்பினால், அவையே உணவளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளலாமென்றும் மந்திரிசபை தீர்மானித்திருப்பதாகக் கூறியுள்ளார்."

தூதுக்கோஷ்டி அனுப்ப முடிவு

அடுத்தபடியாகப் பாடசாலைப் பகுதி வித்தியாதரிசி திரு. வி. கே. நாதன் பேசுகையில் யாழ்ப்பாணப் பட்டினசபை இலவச உணவுக்காகப் பண உதவி யளிப்பதற்கும் உணவு விநியோகப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கும் அதன் உரிமையை உபயோகிக்க வேண்டுமென்றும் ஆலோசனை கூறினார்.

மேலும், சிலர் பேசியபின், யாழ்ப்பாணப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாதி அளவுக்கு ஒரு மேலைச் சாப்பாட்டை வழங்க வழிவகைகளைக் கண்டு பிடிக்கும்படி மாநில ஜனப் பாதுகாப்புக் கொமிஷனருக்கு அறிவுறுத்த அரசாங்கசபையின் யாழ்ப்பாணப் பகுதிப் பிரதிநிதியை உள்ளிட்ட ஒரு தூதுக் கோஷ்டியை அனுப்ப வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பசுவுடன் மோதிய மோட்டார் சைக்கிள்

களுத்துறை, ஏப். 1

நேற்று பொத்துப்பிட்டியில் ஓர் இராணுவவீரர் சவாரிசெய்த மோட்டர்சைக்கிள் ஓர் பசுவுடன் மோதியதன்பயனாக அவ்வீரரின் காலில் முறிவேற்பட்டது. காயமடைந்தவர் சைக்கிளிலிருந்து வீசப்பட்டார். பசு விபத்துக் காரணமாக இறந்தது.

தென்மாரட்சி ஓவியக் கழக விழா

நிகழும் 1944-ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 1-ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் நாலரை மணியளவில் சாவகச்சேரி டிரிபேக் கல்லூரி முன்றலில் ஸ்ரீ சழகப் பூத்திவிழா கடவுள் வணக்கத்துடன் ஸ்ரீ V வீரசிங்கம் ஆசிரியர் அவர்களின் தலைமையில் ஆரம்பமாயது.

மாலை சிறுவரடி, புகைப்படம் [illegible] வகைகளின் பின், தலைவர் [illegible] வகுப்பின் நோக்கத்தை [illegible] விளக்கினார். பின்பு T. சுபரிமணியம் ஆசிரியர் அவர்கள் நகைச்சுவை ததும்ப, ஓவியவுணர்ச்சி யினமைதான் "பாரிஸ்" முதலான கட்டடங்கள் தகர்க்கப்பட்டதற்குக் காயுதத்திற்குங் காரணமெனக் கூறினார், பின்னர், எ. பரமசாமி ஆசிரியர் அவர்கள் முற்காலத்து ஓவிய நிலையையும், விதிபாதரிசி அவர்களினதும் வகுப்பாசிரியரினதும் சேவையையும் எடுத்துக் காட்டினார். பண்டிதர். ஸ்ரீமான். சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் கழகத்தாரதும் வித்தியாதரிசகர் S. R. கனகசபை அவர்களினதும் சேவையைப்பற்றி இலக்கியச் சுவை ததும்பப் பேசினார்.

பின்பு, வகுப்பாசிரியர் அவர்கள் தமக்கு அளித்த உபசாரமனைத்தும் ஓவியத்திற் களித்ததாகக் கூறிக் கழகத்தாரைப் பாராட்டினார். காகோஷதினிடையே விதியாதரிசகர் S. R. K. அவர்கள் எழுந்து ஓவியக் கலையின் பல அம்சங்களையும் ஆசிரியர்கள் இக்கலைக்குச் செய்ய வேண்டிய மகத்தான சேவைகளையும் நன்கு விளக்கினார். கழகக் காரியதரிசி அவர்கள் நன்றி கூறியதும், தேவார பாராயணத்துடன் கூட்டம் பூரணமாயிற்று. —கஷத.

சுவாமி இராமதாசர் மணி விழாக் கொண்டாட்டம்

ஆனந்தாச்சிரமம் சுவாமி இராமதாசர் அவர்களின் மணி விழாக் கொண்டாட்டம் 8-4-44 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வண்ணார்பண்ணை, நாவலர் ரோட், "சொரணகிரி" எனனும் இலலத்தில நடைபெறும்.

நிகழ்ச்சிகள்: நாமசங்கீர்த்தனம், தேவார பாராயணம், பிரசங்கம், ஆராதனை, பிரசாதம்.

குறைந்த விலையில்
துணிகள்
R. S. M. டெக்ஸ்டைல ஸ்ரோர்ஸ்
மொத்தத்துக்கும் சிலலறைக்கும் விற்கும் வியாபாரிகள்
பெரிய கடை—யாழப்பாணம்.
K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.
Y 19. 4-3-42——3-3-44

ஷேட்துணிகள், துவாயகள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

வானமுகில வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன
கோனமுறை யரசுசெயக குறைவிலா துயிர்கள வாழக
நானமறை யறங்களோங்க நறறவம வேள்விமலக
மேனமைக்கள சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prabha Press, Vannarponnai, Jaffna, on Thursday, 6, April, 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org